# சுயமாக-ஸ்வாப் செய்யும் வழிமுறைகள்

எஸ்டி பயோசன்சார் எனப்படும் ஆன்டிஜென் விரைவு பரிசோதனை செய்ய

## கீழ்கண்டவை ஏற்பட்டிருந்தால் ஸ்வாப் செய்வதைத் தவிர்க்கவும்:



கடந்த 24 மணி நேரத்தில் மூக்கில் இரத்தக் கசிவு



கடந்த 4 வாரங்களில் மூக்கில் அறுவை சிகிச்சை



கடந்த 8 வாரங்களில் முகத்தில் காயம் ஏற்பட்டிருந்தால்

## ஸ்வாப் செய்வதற்கான செயல்முறை

**1** பரிசோதனையைத் தொடங்கு முன் உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.



**2** பரிசோதனையைத் தொடங்கு முன், தயவுசெய்து ஒரு ஸ்வாப் குச்சி, ஒரு பரிசோதனை சாதனம், மூடப்பட்டிருக்கும் ஒரு பஃப்பர் குழாய் மற்றும் ஒரு குழாய் அடைப்பு மூடியை வெளியே எடுக்கவும். பரிசோதனை சாதனத்தை அதன் பொட்டலத்திலிருந்து வெளியே எடுக்கவும்.



**3** பொட்டலத்திலிருந்து ஸ்வாப் குச்சியை அகற்றவும்



**4** மெதுவாகச் சுழற்றிக் கொண்டே ஸ்வாப் குச்சியை மூக்கு துவாரத்தினுள் நுழைக்கவும். குச்சியை 10 முறை சுழற்றவும்.

2.0 செ.மீட்டர்



**5** மற்ற மூக்கு துவாரத்திலும் அதே ஸ்வாப் குச்சியை மீண்டும் பயன்படுத்தவும்.

2.0 செ.மீட்டர்



**6** பஃப்பர் குழாயின் அடைப்பைத் திறந்து, கலப்பதற்காக ஸ்வாப் குச்சியைக் குழாயில் நுழைக்கவும். பஃப்பர் குழாயை அழுக்கியவாறு, 10 முறை ஸவாப் குச்சியை அதில் கலக்கவும்.



**7** குழாயை அமுக்கி ஸ்வாப் குச்சியை வெளியில் எடுக்கவும்.



**8** குழாய் அடைப்பு மூடியை இறுக்கமாக அழுத்தி குழாயை மூடவும்.



**9** உங்கள் விரலால் குழாயின் பக்கத்தைச் சில முறை மெதுவாகத் தட்டவும். இது திரவத்தைக் கலக்க உதவும்.



**10** பரிசோதனை பொதியுறையில் உள்ள மாதிரி கலனில் 4 சொட்டு திரவத்தை இடவும்.




**11** பரிசோதனை பொதியுறையில் முடிவுகளைச் சரிபார்க்கும் முன் 15 நிமிடங்கள் காத்திருக்கவும். இவ்வேளையில் பொதியுறையை ஒரு தட்டையான மேற்பரப்பில் வைக்கவும்.

15 நிமிடங்கள்



**12** பரிசோதனை பொதியுறையில் சோதனை முடிவுகளைப் பார்க்கவும்.
**<u>“C” மற்றும் “T” நிலை இரண்டிலும் ஒரு கோடு தோன்றுவதை நீங்கள் கண்டால், இது பாசிடிவ், அதாவது, நேர்மறையான சோதனை முடிவைக் குறிக்கிறது.</u>**
**<u>இப்பரிசோதனை முடிவை மேலும் மதிப்பீடு செய்வதற்கும், அதனை உறுதிப்படுத்தும் பரிசோதனை செய்வதற்கும் தயவுசெய்து மருத்துவ உதவியை நாடவும்.</u>**

**<u>“C” நிலையில் மட்டுமே ஒரு கோடு தோன்றுவதைக் கண்டால்</u>**, இது எதிர்மறையான, அதாவது, நெகடிவ் முடிவைக் குறிக்கிறது.

**<u>“T” நிலையில் மட்டும் ஒரு கோடு தோன்றுவதை நீங்கள் கண்டால்,</u>** பரிசோதனை செல்லுபடி ஆகாது. மற்றொரு சோதனை கருவியைப் பயன்படுத்தி பரிசோதனையை மீண்டும் செய்யவும்.

நேர்மறை | எதிர்மறை | செல்லுபடியில்லை




**13** பயன்படுத்தப்பட்ட அனைத்து ஸ்வாப் குச்சிகள், குழாய் மற்றும் சோதனை பொதியுறையை பயோஹசார்ட் பையில் அப்புறப்படுத்தவும்.



**14** பரிசோதனைக்குப் பிறகு உங்கள் கைகளை சுத்தம் செய்யவும்.

